Fair site at Anna Nagar

* 283 *Q.*—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to set up a permanent Fair at Anna Nagar in Madras City; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 1975-ஆம் ஆண்டு பொங்கல் சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சி முடிந்ததும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பொங்கல் சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சியை நடத்துவதற்குரிய நிரந்தரப் பொருட்காட்சி இடமாக அண்ணா நகர் பொருட்காட்சி இடத்தைக் கொடுக்கும்படி அரசைக் கேட்டுக் கொண்டது. தமிழ்நாடு மாநில வீட்டு வசதி வாரியத்தின் ஆலோசனையுடன் மேற்சொன்ன செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருந்தது. இதற்கிடையில் அண்ணாநகர் நகரத்திலிருந்து வெகு தொலைவில் இருப்பதால் அந்த இடத்தில் நிரந்தரப் பொருட்காட்சி அமைப்பதற்கு முடிவு எதும் எடுக்கப்படவில்லை என்று தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தெரிவித்துள்ளது. 1976-ம் ஆண்டின் பொங்கல் சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சியினை அமைப்பதற்கு வடக்குக் கடற்கரைச் சாலையில் உள்ள போர் நிறுத்த நினைவு மண்டபத்திற்கு மேற்குப் பகுதியில் உள்ள இடத்தை பெறுவதென தற்பொழுது உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 9-30)

THIRU B. VENKATASWAMY : Sir, for conducting this kind of Fair, so many sheds and stalls have to be constructed and so, may I know whether a decision would be taken to set up a Permanent Fair in important places in Tamil Nadu and particularly in the City of Madras?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அங்கத்தினர் கூறியதுபோல நிரந்தரமாக பொருட்காட்சி வைப்பதற்கு ஒரு நிலையான இடத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றுதான் இருக்கிறோம். முன்பு தீவுத் திடல்

1975 நவம்பர் 11]

பொருத்தமுடைய இடமாக இருந்தது. அது இந்திய அரசாங்கத்தின் பாதுகாப்புத் துறையின் கீழ் வந்துவிட்டதால், பொருட்காட்சிசாலை வைப்பதற்கு தகுதியான வேறு ஒரு இடம் தேர்ந்தெடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

சென்ற ஆண்டு அண்ணா நகரில் வைத்தோம். நகர்ப்புறத்தில் இருந்து அங்கு போய்வர வெகு தொலைவில் அது உள்ளதால் அதற்கு முந்திய ஆண்டோடு ஒப்பிட்டுப்பார்க்கிறபோது? பொருட்காட்சியைப் பார்வையிட வந்தவர்களின் எண்ணிக்கை 30 சதவிதம் குறைவாக இருந்ததும் காணப்பட்டது. ஆகவேதான் இந்த ஆண்டு போர் நினைவுமண்டபத்தை ஒட்டியுள்ள மாநில அரசுக்கே சொந்தமான மைய இடத்தில் தற்காலிகமாக வைத்துப்பார்க்கலாம் என்ற முடிவு எடுக்கப்பட்டது. இது வெற்றிகரமாக இருந்தால் இந்த இடத்திலேயே நிரந்தரமாக பொருட்காட்சிசாலையை வைப்பதற்கு வேண்டிய மற்ற ஏற்பாடுகளை எல்லாம் செய்யலாம் என்ற எண்ணம் அரசாங்கத்திற்கு இருந்து வருகிறது.

திரு. நா. வீராசாமி: அண்ணா நகரில் வைத்தபோது அதற்கு முந்திய ஆண்டோடு ஒப்பிடுகிறபோது 30 சதவிதம் பார்வையாளர்களின் எண்ணிக்கை குறைந்திருந்தது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்போது போதுமான பஸ் வசதிகள் இல்லை. இப்போது அது போக்குவரத்து வசதிகளுடன் நன்றாக வளர்ந்திருக்கிறது. மேலும் அங்கே லட்சக்கணக்கான ரூபாய் செலவில் டவர் கூடக் கட்டப்பட்டிருக்கிறது. இன்னும் சர்ச் லைட், மோட்டார் போன்றவைகள் அமைக்கக்கூட டெண்டர் கோரப்பட்டிருந்தது. அது பொருட்காட்சியைப் பார்க்க வருகிறவர்களை ஈர்க்கக்கூடிய இடமாக இருப்பதனால் அங்கேயே நிரந்தரமாக அமைக்க ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அண்ணா நகர் வளர்ந்து வருகிற சென்னை நகரின் ஒரு ஓரப் பகுதியில் இருக்கிற ஒன்று. இப்போது தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற இடம் நகரின் மையப் பகுதியில் இருக்கிற ஒன்று. பொருட்காட்சிக்குப் போக வேண்டும் என்கிற விருப்பம் உடையவர்கள்தான் அண்ணா நகருக்குப் போக முடியும். போக வேண்டும் என்கிற எண்ணம் இல்லாதவர்களும்கூட அவர்கள் போய்வரக்கூடிய வழியிலேயே இந்தப்

பொருட்காட்சி அமைவதால் இங்கே போகவேண்டும் என்கிற எண்ணத்தைத் தூண்டுவதாக இது அமையும். மேலும் அண்ணா நகரில் குடியிருப்புகள் தற்போது அதிகமாகிவிட்டன. அதுவும் பொருட்காட்சி என்று 1½ மாதங்கள் பல விழாக்களோடு நடைபெறுவதால் அங்கு குடியிருப்பவர்களுக்கு மிகவும் தொல்லையாக இருக்கிறது என்று பல மகஜர்கள் அனுப்பியிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் உள்ளடக்கித்தான் தற்போது பரீட்சார்த்தமாக இந்த ஆண்டு போர் நிறுத்த நினைவு மண்டபத்திற்கு மேற்குப் பகுதியில் உள்ள இடத்தில் வைக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். இதுவே நல்ல இடமாக அமைந்தால், எதிர் காலத்தில் இங்கே நிரந்தரமாக அமையத்தக்க ஏற்பாடுகளைச் செய்ய சுற்றுலா வளர்ச்சிக்கழகம் முன்வரும்.

Recognised Medical Colleges.

* 284 *Q.*—THIRU N. DENNIS

THIRU N. KITTAPPA: Will the Hon. the **Minister** for Health be pleased to state—

(*a*) the Medical Colleges in the State for which recognition of the Indian Medical Council has been obtained; and

(*b*) the steps taken by the Government to get recognition for the remaining colleges?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) சென்னை மருத்துவக் கல்லூரி, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி, சென்னை. மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரை. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி, தஞ்சாவூர். கோயமுத்தூர் மருத்துவக் கல்லூரி, கோயமுத்தூர்.

(இ) செங்கற்பட்டிலுள்ள செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரிக்கும், திருநெல்வேலியிலுள்ள திருநெல்வேலி மருத்துவக் கல்லூரிக்கும் ஏற்பளிப்பது குறித்து இந்திய மருத்துவ மன்றத்திற்குக் கடிதம் எழுதப்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா: ஏற்பளிப்புப் பெற வேண்டிய எஞ்சிய மருத்துவக் கல்லூரிகளுக்கு, அத்தகைய ஏற்பளிப்பு வழங்குவதில் காலதாமதம் ஆவதற்குக் காரணம் அறிவிக்க இயலுமா?